சென்னை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல் முறைகள் , சென்னை- 08

ந.க.எண்.7316அ5/2022 நாள். .05.2023

பொருள்: பள்ளிக்கல்வி - சென்னை மாவட்டம்- மேல்நிலை முதலாம் ஆண்டு /இடைநிலை பொதுத் தேர்வு முடிவுகள்- வெளியிடுதல் பொதுத்தேர்வுகள் தேர்ச்சி முடிவுகள் சார்ந்து அனைத்து வகை மேல்நிலைப் பள்ளிகள் / உயர்நிலைப்பள்ளிகள் அறிக்கை அனுப்பக் கோருதல் - தொடர்பாக

பார்வை: சென்னை-06,அரசுத்தேர்வுகள் இயக்ககம் தெரிவித்துள்ள செய்திக்குறிப்பு நாள் 15.05.2023

*****

பார்வையில் காணும் அரசுத்தேர்வுகள் இயக்ககத்தின் செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு மார்ச்/ ஏப்ரல் 2023 நடை பெற்ற இடைநிலை பொதுத் தேர்வு முடிவுகள் 19.05.2023 அன்று காலை 10 .00 மணிக்கும் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வு முடிவுகள் 19.05.2023 அன்று மதியம் 2.00 மணிக்கும் வெளியிடப்படுகின்றன.

தேர்வு முடிவுகள் வெளியான பின்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மூன்று படிவங்களில் விவரங்களை பூர்த்தி செய்து இடைநிலை பொதுத் தேர்வு முடிவுகளுக்கான பகுப்பாய்வை 19.05.2023 அன்று மாலை 4 மணிக்கும் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வு முடிவுகளுக்கான பகுப்பாய்வை 20.05.2023 அன்று மதியம் 1.00 மணிக்கும் அனைத்து அரசு/ஆதிதிராவிட மேல்நிலைப் பள்ளிகள்/ உயர்நிலைப்பள்ளிகள் முதன்மைக் கல்வி அலுவலக மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | பள்ளியின் வகை | அலுவலகம் |
|---|---|---|
| 1 | அனைத்து சென்னை மேல்நிலை/ உயர்நிலை பள்ளிகள் | கல்வி அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி |
| 2 | அனைத்து அரசு உதவி பெறும் மேல்நிலை/ உயர்நிலை பள்ளிகள் | சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலகம் (இடைநிலை) |
| 3 | அனைத்து ஆங்கிலோ இந்திய மேல்நிலை/ உயர்நிலை பள்ளிகள் | மாவட்டக் கல்வி அலுவலகம் (தொடக்கக் கல்வி) |
| 4 | அனைத்து தனியார் மேல்நிலை/ உயர்நிலை பள்ளிகள் | சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலகம் ( தனியார் பள்ளிகள்) |

மேலே குறிப்பிட்டுள்ளவாறு அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள் தேர்வு முடிவுகள் வெளியான பின்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள 3 படிவங்களை பூர்த்தி செய்து சார்ந்த கல்வி அலுவலகங்களுக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்களும் பூர்த்தி செய்த படிவங்களை தொகுத்து 20.05.2023 அன்று மாலை 3.00 மணிக்குள் முதன்மைக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தேர்ச்சி பெறாத மற்றும் பொதுத் தேர்விற்கு வருகை புரியாத மாணவர்களுக்கு 22.05.2023 முதல் தேர்ச்சி பெறாத பாடங்களுக்கும் மற்றும் அனைத்து பாடங்களுக்கும் சார்ந்த பள்ளிகளில் பாட ஆசிரியர்களைக் கொண்டு பயிற்சி வழங்கப்படும் எனவும் சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

முதன்மைக்கல்வி அலுவலர்

சென்னை

பெறுநர்

1. கல்வி அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை-03.
2. அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள்( இடைநிலை ) சென்னை மாவட்டம்.
3. அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள்( தனியார் பள்ளிகள் ) சென்னை மாவட்டம்.
4. மாவட்டக்கல்வி அலுவலர் (தொடக்கல்வி) சென்னை மாவட்டம்.
5. அனைத்து தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள் சென்னை மாவட்டம்.

நகல்

1. இணை ஆணையர் பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை-03 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. சென்னை -06 அரசுத்தேர்வுகள் இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது .